செ.வெ.எண்: 254 நாள்: 16.05.2024

**புதுக்கோட்டை மாவட்டம்**

**மழைக்காலங்களில் ஏற்படும் இடர்பாடுகள் குறித்த தகவல்களை 1077, 04322-222207 ஆகிய தொலைபேசி எண்களில் தெரிவிக்கலாம் -**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்டரங்கில், கனமழையின் காரணமாக மேற்கொள்ளப்படும் முன்னேற்பாடு பணிகள் குறித்தும் மற்றும் அனைத்துத்துறை பணிகள் குறித்தும், கலந்தாய்வுக் கூட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (16.05.2024) நடைபெற்றது.

**பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது;**

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில், இந்திய வானிலை ஆய்வு மையம் மூலம் பெற்றப்பட்ட அறிக்கையின்படி, தமிழகத்தில் 19.05.2024 வரை கனமழை பெய்வதற்கான வாய்ப்புகள் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்தவகையில் புதுக்கோட்டை மாவட்டத்தை பொறுத்த வரையில் 17.05.2024, 18.05.2024 மற்றும் 19.05.2024 ஆகிய நாட்களில் கனமழை பெய்வதற்கான வாய்ப்புகள் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இன்றையதினம் கனமழையின் போது மேற்கொள்ளப்படும் முன்னேற்பாடு பணிகள் குறித்து கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இந்திய வானிலை ஆய்வு மையத்தால் புதுக்கோட்டை மாவட்டத்தில் 16.05.2024 அன்று மிக அதி கன மழைக்கான சிவப்பு நிற எச்சரிக்கை (Red Alert) விடுக்கப்பட்டுள்ளது. அதன்படி, முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குளங்கள், ஏரிகள் மற்றும் கண்மாய்கள் உள்ளிட்ட நீர் நிலைகளில் நிரம்பியுள்ள நீரின் இருப்புக் குறித்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும், புதுக்கோட்டை மாவட்டத்தில் புயல், வெள்ளம் சூறாவளி ஆகியவற்றால் ஏற்படும் மின்தடையினை சரி செய்வதற்கு முன்னெச்சரிக்கையாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் மின்கம்பங்களும், மின்கம்பிகள் மற்றும் மின்மாற்றிகள் தயார் நிலையில் உள்ளன. மேலும், புயல், வெள்ளம் ஏற்படும் காலங்களில் மக்களை பாதுகாப்பாக தங்க வைக்க ஏதுவாக 10 - பல்நோக்கு பேரிடர் மையக் கட்டிடங்கள் மற்றும் நிவாரண மையங்கள் தயார் நிலையில் உள்ளன. மழைக்காலங்களில் ஏற்படும் இடர்பாடுகள் குறித்த தகவல்களை 24 மணி நேரமும் செயல்படக்கூடிய மாவட்ட அவசரக் கட்டுபாட்டு அறை எண் - 1077, 04322-222207 ஆகிய கட்டணமில்லா தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம்.

மேலும் இக்கூட்டத்தில், அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடன் நடைபெற்ற பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. பொதுமக்களின் நலனிற்காக செயல்படுத்தப்படும் பணிகளை, விரைவாக முடித்து பயன்பாடிற்கு கொண்டுவர சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திரு.அப்தாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.முருகேசன், வருவாய் கோட்டாட்சியர்கள் செல்வி.பா.ஐஸ்வர்யா (புதுக்கோட்டை), திரு.ச.சிவக்குமார் (அறந்தாங்கி), திருமதி.தெய்வநாயகி (இலுப்பூர்) மற்றும் அரசு துறை உயர் அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.

------------------------------------------------------------------------------------------------------------

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai